சமூக விஞ்ஞான கற்கை வட்டம்





04-07-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : NGOக்கள் சொல்வதும் செய்வதும்**

தம்மை மனித உரிமைப் பாதுகாவலர்களாகவும், மக்களின் நல்வாழ்வுக்கும் வறுமை ஒழிப்புக்கும் உழைப்பவர்களாகவும் இன்னும் பலவாறும் அறிவித்துக்கொண்டு ஏராளமான அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இயங்கி வருகின்றன.

2002 சமாதான ஒப்பந்தத்துக்குப் பிறகும் சுனாமிப் பேரழிவுகளுக்குப் பிறகும் ஏராளமான அரச சார்பற்ற நிறுவனங்கள் பெருகியுள்ளன. இவற்றுட் பெரும்பாலானவை வெளிநாட்டுக் கொடை நிறுவனங்களாக இருக்கும் சில INGO க்களிடமே நேரடியாகவோ மறைமுகமாகவோ பணம் பெறுகின்றன. இவ்வாறு பணம் வழங்கும் நிறுவனங்களுட் பெரும்பாலானவை மேற்குநாட்டு அரசுகளின் முகவர் நிறுவனங்களாகவே இருக்கின்றன.

NGOக்கள் உருவாக்கப்பட்ட காலத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட வறுமை ஒழிப்பினையோ மனித உரிமைகளை நிலைநாட்டுதலையோ இத்தனை காலத்துக்குப் பிறகும் அவற்றால் சாதிக்க முடியவில்லை. வறுமையும் மனித உரிமை மீறல்களும் மோசமாகிக்கொண்டே வந்திருக்கின்றன. ஆனால், அவை அதிகம் வெளிப்படையாக அறிவிக்காத அவற்றின் நிகழ்ச்சிநிரல்களான தனியார்மயமாக்கம் - தாராளமயமாக்கம் - உலகமயமாக்கம் ஆகியவற்றுக்கு மிகப்பெரிய அளவில் இவ் அரச சார்பற்ற நிறுவங்கள் உதவியும் பங்களிப்பும் செய்துள்ளன என்பதே வரலாற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடியதாகும்.

இலங்கையின் அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்களில் இவ் அரசசார்பற்ற நிறுவங்கள் எவ்வகையான தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றன என்பது கவனத்துடன் அவதானிக்கப்படவேண்டிய ஒரு விடயம்.

தன்னார்வத் தொண்டு என்பதை சராசரியைவிட அதிகமான சம்பளத்துடன் செய்யும் ஒரு தொழிலாக மாற்றியதன் மூலம் சமூக அக்கறை என்பதைக்கூட பண மதிப்போடு தொடர்புற்றதாக ஆக்கியமை தொடக்கம், மக்கள் இயக்கங்கள், மக்கள் அசைவியக்கங்கள், மக்களது கலை பண்பாட்டு இயக்கங்கள் அத்தனையையும் மலினப்படுத்தி, அவை மக்களைச் சார்ந்து நிற்கிற அடிப்படைகளை இலாதொழித்ததும் இத்தனை காலத்துள் NGOக்கள் சாதித்ததே.

> **சி**வில் சமூகம் என்கிற அடையாளத்தில் என்.ஜி.ஒக்கள் மக்கள் சார்பாகப் பேசுகிற புதிய பிரமுகர்களை உருவாக்குகிறார்கள். அரசியற் கட்சித் தலைவர்கட்கு மாற்றாக எவ்வகையிலும் மக்களால் தெரிவு செய்யப்படாத என்.ஜி.ஒ. அலுவலர்களும் முகவர்களும் தங்களைச் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளாக நிலைநாட்ட முயலுகின்றனர்.

தமது கொடையாளர் நாடுகளே நேரடியாகவும் உதவிக்கொண்டிருந்தபோது அதனைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, போர் முடிந்த பிறகு போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுகிற உருப்படியான அமைப்புக்கள் தாமே எனவும் போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு எதிராகக்குரல் கொடுப்பவர்கள் தாமே எனவும் இவை அறிவித்துக்கொள்வது இவற்றின் இரட்டை நிலைப்பாட்டினையே காட்டுகிறது.

"உடனடியான நன்மை"களை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதாக NGOக்கள் தம்மை நியாயப்படுத்துகின்றன. மக்களும் இவ்வாறான நன்மைகளுக்காகவே இந்நிறுவனங்களை நாடி நிற்கிறார்கள். ஆனால், நீண்ட கால அடிப்படையில் மோசமான விளைவுகளை இவை ஏற்படுத்தவல்லவை என்பதை மிக எளிதாகப் புரியவைப்பது கடினமாகவே உள்ளது.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

13 வது யாப்புத்திருத்தமும்
**சிறுபாண்மையினரின் எதிர்காலமும்**
11-07-2013

**மூலதன நூலின் கால மாற்றம்**
சி. சிவசேகரம் | 18-07-2013



பாப்லோ நெருடா

**பாப்லோ நெருடா, (Pablo Neruda, ஜூலை 12, 1904 - செப்டம்பர் 23, 1973)** என்ற புனைப்பெயர் கொண்ட ரிக்கார்டோ இலீசர் நெப்டாலி ரீயஸ் பொசால்தோ ( Ricardo Eliecer Neftalí Reyes Basualto), சிலி நாட்டில் பிறந்தவர். இவர் இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர். கவிஞராகவும், சமூக உணர்வு கொண்ட போராளியாகவும், மார்க்சிய தத்துவங்களில் ஈடுபாடு கொண்டவராகவும் திகழ்ந்தவர்.

11964ஆம் ஆண்டு ப்ரெஞ்சு தத்துவவாதியான ழான் பால் சார்த்தர் நோபல் பரிசு வேண்டாம் என்று சொல்லி மறுத்ததற்கு ஒரு காரணம், அந்த ஆண்டு பாப்லோ நெருடாவிற்கு பரிசு கொடுத்திருக்க வேண்டும் என்பது. 1971 ஆம் ஆண்டு பாப்லோ நெருடாவுக்கு நோபெல் பரிசு வழங்கப்பட்டது.

"இருபதாம் நூற்றாண்டில் உலக மொழிகள் எல்லாம் கண்ட மாபெரும் கவிஞர் இவரே" என்று லத்தீன் அமெரிக்க எழுத்தாளராகிய கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ், நெருடாவினைப் புகழ்கின்றார்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.**

**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## NGO க்கள் சொல்வதும் செய்வதும்

முன்பக்கத் தொடர்ச்சி..

தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கும் மக்கள் ஒன்றுபட்டு மக்கள் அமைப்புக்களைக் கட்டியெழுப்பிப் போராடுவதொன்றே நிலையான மாற்றத்துக்கான வழியாக இருக்கையில், மக்களை வெறும் கையேந்துபவர்களாக மாற்றி, மக்கள் அமைப்புக்களுக்கான இடைவெளிகளையே இல்லாதொழிக்கும் நிகழ்ச்சிநிரலையை NGOக்கள் செயற்படுத்துகின்றன.

உலகளாவிய ரீதியில் NGOக்களின் செயற்பாடுகளை ஆராயும்போது, அரசியல் ரீதியில் அவை மக்களுக்குப் பாதகமான நிகழ்ச்சிநிரல்களைச் செயற்படுத்துவதற்கு எவ்வாறெல்லாம் துணைபோயிருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள முடியும்.

மக்கள் இயக்கங்கள் செயற்பட வேண்டிய இடைவெளியை என். ஜீ. ஒக்கள் எப்படித் தங்களுடையதாக்க முடிகிறது என்பது நம் கவனத்துக்குரியது. சிவில் சமூகம் என்ற பேர் என். ஜீ. ஒக்கள் அணிந்து கொள்ளுகிற ஒரு முகமூடி என்பதை நாம் கவனிக்க வேண்டும். அது உண்மையான சிவில் சமூகத்திற்கு அரசியல் செயற்பாட்டை மறுக்கும் நோக்குடன் பாவிக்கப்படுகிறது.

'சிவில் சமூகம்" என்கிற அடையாளத்தில் என்.ஜி.ஒக்கள் மக்கள் சார்பாகப் பேசுகிற புதிய பிரமுகர்களை உருவாக்குகிறார்கள். அரசியற் கட்சித் தலைவர்கட்கு மாற்றாக எவ்வகையிலும் மக்களால் தெரிவு செய்யப்படாத என்.ஜி.ஒ. அலுவலர்களும் முகவர்களும் தங்களைச் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளாக நிலைநாட்ட முயலுகின்றனர்.

நாட்டில் ஒழுங்காகக் கணக்கு வழக்குக் காட்ட வேண்டிய தேவையற்ற அமைப்புக்களான என்.ஜி.ஒக்களின் கையில் தாராளமாக நிதி புரளுவதால், மேலிடத்து அங்கீகாரத்துடனும் சிலசமயம் அது இல்லாமலும் சமூகத்தில் உள்ள சில பிரமுகர்களை விலைக்கு வாங்க என்.ஜி.ஒ. முகவர்கட்கு இயலுமாகிறது.

### 13 வது யாப்புத்திருத்தமும் சிறுபாண்மையினரின் எதிர்காலமும்
### (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)

1. 13வது யாப்புத்திருத்தம்: வரலாறும் பின்னணியும்

2. 13++ மற்றும் 13--: சில விளக்கங்கள்

3. இன்றைய சூழலில் 13வது யாப்புத்திருத்தம்: விவாதமும் விதண்டாவாதமும்

4. இந்தியாவும் 13வது யாப்புத்திருத்தமும் LLRCயும் சர்வதேசமும்

5. 13வது யாப்புத்திருத்தம் தமிழ் மக்களுக்கான தீர்வாகுமா?

6. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளும் எதிர்காலமும்

7. முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள் உட்பட ஏனைய சிறுபான்மையினரும் 13 வது யாப்புத்திருத்தமும்



காலஞ்சென்ற மலையக கலைஞர் கபாலி செல்லன் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு இயற்றிய பாடல்கள்

நம்பப் படும் பாடு
சொல்லவே வெட்கக்கேடு
சின்ன சின்ன வீடு
அஞ்சாரு புள்ளே ஏழு

ஆறுமணிக் காடு
அஞ்சரை மணி வீடு
ஐயா தொரைமாரு
அநியாயம் பண்ணுராரு
ஒன்னா(ம்) நம்பர் தொங்க
அது ஒன்னரை மயிலுங்க

மூத்தப்புள்ளை முத்தையா
பொறந்த குறிப்பு இல்லைய்யா
முப்பது வயதாகியும்
ஓட்டுரிமை இல்லைய்யா.. இந்த
நாட்டுரிமையும் இல்லைய்யா

தண்ணி வல்லே பைப்பிலே
வேலைக்குப் போ பொம்பளே
ஏழரை மணிக்கு நிரையிலே
பிந்தி போனா துண்டில்லே

***********

ஏக்கிறான் ஆளை ஏக்கிறான் நம்பளை
ஏமாளி என்று இன்னும் ஏக்கிறான்
மாளிகைய கட்டுனவன்
மண் மேலே தூங்கிறான் அதை
ஆள வந்த சீமானோ
மெத்தையிலே தூங்குறான்
பஞ்சு மெத்தையிலே தூங்குறான்

கட்டத் துணியில்லாம நாங்க பெருங்
கஷ்டப் படுவதும் ஏங்க ஒங்க
மொட்டை கதவு அந்த ஜன்னலுக்கு நீங்க
அழகா பட்டாடை போத்துவதும் ஏங்க

அஞ்சாரு பேரோட நாங்க ஒரு
அறையில வசிப்பது ஏங்க
அறுபது அறையிலே நீங்க
குடிச்சு கும்மாளம் அடிப்பது ஏங்க

அட்டாலே இல்லாத வீடு எங்க
கூரையெல்லாம் ஓட்டைங்க சாரு
அதைக் கேக்க தலைவருமாறு இன்னும்
போராடி கிட்டிருக்காரு

கஸ்டப்படும் பாட்டாளி நாங்க
காரு மேலே சவாரி நீங்க
காலம் வரும் பாத்துக் கெல்லாம் போங்க
காத்திருப்போம் அதுவரைக்கும் நாங்க

நன்றி : மல்லியப்பு சந்தி திலகர்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.